உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.689/2023

பெயர் : லெட்சுமிகாந்தன்(அ.சா.4)

தகப்பனார் பெயர் :அழகன்அம்பலம்

கணவர் பெயர் :

வயது :

கிராமம் :சின்னகற்பூரம்பட்டி

வட்டம் :மேலூர்

தொழில் :விவசாயம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

25.06.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 செல்வமணி அவரது மனைவி மீனாட்சி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். தற்போது மீனாட்சி உயிருடன் இல்லை. சுமார் 2- ½ ஆண்டுகளுக்கு முன்பாக அ.சா.1 செல்வமணியின் 2வது மனைவி மீனாட்சி இறந்துவிட்டார். எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது. இதுதொடர்பாக காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டது. இறந்த மீனாட்சி பெரியகற்பூரம்பட்டியில் இறந்தார்.அவரது உடலை வெளியே எடுத்துவரும் போது சண்டை நடந்தது. நான் வெளியே நின்று கொண்டிருந்தேன். வீட்டிற்குள் சத்தம் கேட்டது. செல்வமணிக்கும், 2வது மனைவியான மீனாட்சியின் குடும்பத்தாரும் இடையே வாக்குவாதம் நடந்தது. நான் வெளியே நின்று கொண்டிருந்தேன். செல்வமணிக்கு கழுத்து பக்கத்தில் காலரில் ரத்தம் பட்டிருந்தது. வேறு நடந்தது தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

கடந்த 03.06.2022ம் தேதி காலை 6 மணிக்கு செல்வமணி வீட்டில் முன்பகுதியில் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் இரும்புக்கம்பியில் மீனாட்சி தன் சேலையை கொண்டு தூக்கு போட்டு இறந்ததற்கு செல்வமணி தான் காரணம் என்று 1வது எதிரி வடிவேலு, அவருடைய மாமன்களான 2,3 எதிரிகளும், ஆலம்பட்டியில் இருந்து இருசக்கர வாகனத்தில் செல்வமணி வீட்டிற்கு வந்து காலை 10 மணியளவில் 1வது எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியால் செல்வமணியை என் அக்கா சாவுக்கு நீ தான் காரணம் இதோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி கழுத்தில் ரத்தம் காயம் ஏறப்டுத்தியதை பார்த்து போலிசார் விசாரணையில் சொல்லியிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் உறவினர் என்பதால் அவருடன் சமாதானம் செய்து கொண்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி :-

செல்வமணிக்கு சட்டை காலரில் ரத்தம் இருந்தது எப்படி ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.06.25 18:22:09 +0530

Assistant Sessions Judge

Melur